**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,**
**ARIYALUR**

| **MCOP . No. 42/2025** | | **R.W.–1** |
|---|---|---|
| Name | : | **V.சத்யா** |
| Occupation | : | **இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம்** |
| Village | : | |
| Taluk | : | நாகப்பட்டினம் |
| Age | : | 31 |
| Date | : | **01.07.2026** |

(சாட்சி ஆஜர், சத்திய பிரமாணம் செய்து வைத்து விசாரிக்கப்பட்டார்)

**முதல் விசாரணை**

நான் நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்கிய 30.06.2026 ஆம் தேதியிட்ட கடிதம் **சா.சா.ஆ.1.** இவ்வழக்கில் நாகப்பட்டினம் காவல் நிலைய குற்ற எண்.59/2025 சம்மந்தப்பட்ட விபத்தில் ஈடுபட்ட TN 51 AH 3832 என்ற பதிவு எண் கொண்ட டிராக்டரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **சா.சா.ஆ.2.** மற்றொரு இருசக்கர வாகனமான TN 72 AM 7088 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **சா.சா.ஆ.3.** TN 51 AH 3832 வாகனத்தின் ஓட்டுநர் காளியப்பன் மகன் சண்முகம் என்பவரின் ஓட்டுநர் உரிமம் சம்மந்தப்பட்ட பதிவுகளின் கணினிப்பதிவு **சா.சா.ஆ.4.** விபத்து நடந்த தேதியான 05.02.2025 அன்று டிராக்டர் ஓட்டுநர் சண்முகத்திற்கு ஓட்டுநர் உரிமம் அமலில் இல்லை, 29.10.2015 ஆம் தேதி அது காலாவதியாகிவிட்டது. ஓட்டுநர் உரிமம் இல்லாத நபரை வாகனம் ஓட்ட அனுமதித்தற்காக வாகனத்தின் உரிமையாளருக்கு ரூ.10,000/– அபராதம் விதிக்கப்பட்டது. சாலை வரி நடப்பில் இல்லாத காரணத்தினால் ரூ.500/– அபராதம் விதிக்கப்பட்டது. டிப்பர் நிரந்தர பதிவு செய்யப்படாத காரணத்திற்காக ரூ.10,000/– அபராதம் விதிக்கப்பட்டது. சாலை வரி செலுத்தப்படாததால் ரூ.1200/– சாலை வரி வசூலிக்கப்பட்டது. ஒரு ஆக்ஸிலில் 4 டயர் பொறுத்தப்பட்டதற்கு ரூ.5000/–

அபராதம் விதிக்கப்பட்டது. டிப்பரின் அனுமதிக்கு புறம்பாக 7280 Kg M-sand ஏற்றியதற்கு ரூ.5000/- அபராதம் விதிக்கப்பட்டது. ஆக மொத்தம் ரூ.31,700/- வாகனத்தின் உரிமையாளரிடம் வசூலிக்கப்பட்டது. அதற்கான எங்கள் அலுவலக பதிவேட்டின் சான்றிட்ட நகல்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். மேற்படி சான்றிட்ட நகல்கள் **சா.சா.ஆ-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. டிராக்டர் வாகனம் விவசாய பயன்பாட்டிற்கு என பதிவு செய்யப்பட்டிருந்தது. விவசாய பயன்பாட்டை தவிர வேறு விதத்தில் பயன்படுத்தினால் அது மோட்டார் வாகன விதிகளுக்கு புறம்பானது.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சா.சா.ஆ-2-ல் TN 51 AH 3238 வாகனத்தின் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 30.10.2012 முதல் 29.10.2015 தேதி வரை காளியப்பன் மகன் சண்முகன் என்பவருக்கு எங்கள் அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டதற்கான பதிவுகள் சா.சா.ஆ.4-ல் உள்ளது என்றால் சரிதான். சண்முகம் அதற்கு பின்னிட்ட காலத்தில் வேறு அலுவலகத்தில் தன்னுடைய ஓட்டுநர் உரிமத்தை புதுப்பித்திருந்தால் அது எங்களுடைய அலுவலக பதிவுகளில் வராது என்று சொன்னால் சரியல்ல. வாகனம் உரிமையாளர் அசோகன் என்பவரிடமிருந்து தான் நாங்கள் அபராத தொகையை வசூலித்துள்ளோம் என்றால் சரிதான். விவசாய சம்மந்தப்பட்ட பணிகளுக்காக டிராக்டரில் கட்டுமான பொருட்களை ஏற்றிச்செல்லாம் என்றால் டிப்பர் பதிவு செய்யப்பட்டிருந்தால் ஏற்றிச்செல்லலாம். டிராக்டருடன் இணைந்து தான் டிப்பர் செல்லவேண்டும் என்றால் சரிதான், ஆனால் இரண்டும் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**<u>மறுவிசாரணை</u>** - இல்லை. sd./- சத்யா

நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சியை விசாரித்து தட்டச்சரால் அடிக்கப்பட்டு சாட்சியிடம் வாக்குமூலத்தை படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி ஒப்புதல் அளிக்கப்பட்டு என்னால் சரிபார்த்து கையெழுத்திடப்பட்டது.

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.07.01 12:31:36 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
அரியலூர்.